**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 132/2015 C/W OS.169/2019**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 08.04.2026 | | |
| பெயர்: | ராஜா<br>(DW1–Cross continuation) | தகப்பனார் பெயர்: | நடேசன் |
| கிராமம்: | மாங்கனாம்பட்டு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | ஓட்டுநர் | வயது : | 46/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 08.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 11.26)**

1. வாதி ராமலிங்கம் தொடர்ந்திருந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையுடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வரைபடத்தில் எனது வீட்டிற்கு மேற்கில் வாதி வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு மேற்கில் ரோடு உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு வடக்கில் அப்பாவு மனை உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கில் பாவாடை, முனியன் வீடு உள்ளதாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.169/2019ல் வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிவிப்பில் எனது வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் மொத்தம் உள்ள 15 குழியில் 10 குழியை வாதி ராமலிங்கம் ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சர்வே எண்.262/H/13க்கு தென்புறத்தில் 10 குழி ஆக்கிரமித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு

எண்.169/2019ல் மேற்கண்ட 10 குழியை தான் வசம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.169/2019 தாவா A அட்டவணை சொத்திற்கு நான்கெல்லையாக பாவாடை புஞ்சை மனைக்கு வடக்கு, அப்பாவு புஞ்சை மனைக்கு தெற்கு, வடபுறமாய் ரோட்டுக்கு கிழக்கு, ராகவேந்திரா புஞ்சை மனைக்கு வடக்கு குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது பிராதில் தாவா B அட்டவணை சொத்தில் 1ம் பிரதிவாதி குடியிருக்க எனது தந்தை நடேசன் அனுமதி கொடுத்தார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் கடந்த 2001ம் வருடத்தில் காலமாகிவிட்டார்.

4. எனது தந்தைக்கு நானும், எனது சகோதரர் கலியபெருமாள் மட்டுமே வாரிசுகள் ஆவார். எனது தந்தைக்கு வாரிசு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த வருடம் பற்றி எனது பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் எந்த வருடம் வாதி ராமலிங்கத்திற்கு B அட்டவணை சொத்தில் குடியிருக்க அனுமதி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதை எனது பிராதிலும் கூறவில்லை என்றால் சரிதான்.

5. மேற்கண்ட விபரத்தை பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது A அட்டவணை சொத்தின் நான்கெல்லையில் 1ம் பிரதிவாதியின் இடம் குறிப்பிடப்படவில்லை என்றால் 1ம் பிரதிவாதி A அட்டவணை சொத்தின் உள்ளே ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதை தனியாக கூறவில்லை. B அட்டவணை சொத்திற்கு நான்கெல்லையாக தெருவுக்கு கிழக்கு, மல்லிகா மற்றும் ஜெயராமன் மனைக்கு தெற்கு, வாதி மனைக்கு மேற்கு, முனியன் மனைக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. அதில் வாதி மனைக்கு மேற்கு எங்கள் மனையை குறிப்பதாகும். B அட்டவணை சொத்திற்கும் நான்கெல்லையில் வாதி ராமலிங்கம் பெயர்

வரவில்லை என்றால் சரிதான். அதில் வாதி ராமலிங்கம் வீடு உள்ளதாக கூறவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.169/2019 வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.169/2019 ல் அப்பாவு மனைக்கு தெற்கு என காட்டாமல் மல்லிகா மற்றும் ஜெயராமன் மனைக்கு தான் தெற்கு என்று உள்ளது என்றால் ஜெயராமனின் தகப்பனார் தான் அப்பாவு ஆவார்.

7. வாதி 1.5 ஏர்ஸ்க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1.5 ஏர்ஸ்ஸை தான் நான் B அட்டவணை சொத்தாக காண்பித்து வசம் கேட்கிறேன் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள 1.5 ஏர்ஸ் நான்கெல்லைக்கும், நான் தாக்கல் செய்துள்ள B அட்டவணை சொத்தின் 1.5 ஏர்ஸ் நான்கெல்லைக்கும் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.132/2015 வழக்கின் எதிர் வழக்குரையில் உள்ள நான்கெல்லைக்கும், அசல் வழக்கு எண்.169/2019 B அட்டவணை சொத்தின் நான்கெல்லைக்கும் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. இதை மறைக்க தான் அசல் வழக்கு எண்.169/2019ல் B அட்டவணை சொத்தின் நான்கெல்லையை சரியாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்துள்ள புல எண்.262/H/13 எண்ணிற்கும், வாதி தாக்கல் செய்துள்ள புல எண்.262/H/46க்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புல எண்.262/H/13 லிருந்து பிரிந்தது தான் புல எண். 262/H/46. தாவா B அட்டவணை சொத்தை அளப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் இந்நாள் வரையில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

9. அசல் வழக்கு எண்.132/2015 க்கு எதிர் வழக்காக தான் அசல் வழக்கு எண்.169/2019 ஐ தாக்கல் செய்தேன் என்றாலும், அதனால் தான் தள்ளுபடி

செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் மனு மீது எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண்.132/2015 ல் பிரதிவாதிகள் 39ச.மீ ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் சட்டத்தின் பார்வையில் B அட்டவணை சொத்தை பொறுத்து நான் ஆக்கிரமிப்பாளர் என்பதால் அதனை வசம் ஒப்படைக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

10. புல எண்.262/H/46 ஐ பொறுத்து எனக்கு உரிமை மூலம் இல்லாத காரணத்தால் தான் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பொறுத்து புல எண்.262/H/46 எவ்வித உரிமை மூலமும் இல்லை என்றாலும், அதனால் எனக்கு எந்த அனுகூலமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. அதனால் வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.132/2015 ஐ தீர்ப்பாணை செய்தும், நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.169/2019 ஐ தள்ளுபடி செய்தும் உத்தரவிட வேண்டும் என்றால் சரியல்ல.

11. அதனால் தான் அசல் வழக்கு எண்.169/2019 ல் 1.5 ஏர்ஸ் 1ம் பிரதிவாதி ராமலிங்கத்திற்கு எனது தந்தையார் அனுமதி கொடுத்தாக கூறப்படுவது பொய்யானது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.169/2019 ஐ பொறுத்து B அட்டவணை சொத்தில் உரிமை மூலம் இல்லாத காரணத்தால் எங்களிடம் அனுமதி வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.03)**